00001

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
கல்விப் பீடம்
முன்பிள்ளைப் பருவ மற்றும் ஆரம்பக் கல்வித்துறை
கல்விமாணி (சிறப்பு) ஆரம்பக் கல்வி
இறுதிப் பரீட்சை – 2020/2021

**EPU 5550 – ஆரம்பக் கல்வியில் கல்வி உளவியல்**

பகுதி **I** இல் அனைத்து வினாக்களுக்கும் பகுதி **II** இல் ஏதேனும் மூன்று (03) வினாக்களுக்கும் விடை தருக.

திகதி : **28/01/2023** | நேரம்: மு.ப 09.30 – பி.ப 12.30

## பகுதி I

1. கல்வி உளவியல் என்றால் என்ன? வரைவிலக்கணத்துடன் விளக்குக.
2. கல்வி உளவியலை பிரயோகிக்கும் ஆசிரியரொருவரின் முக்கிய பண்புகள் மூன்றினைப் (03) பற்றிக் கலந்துரையாடுக.
3. ஆரம்ப பாடசாலை ஆசிரியராக மாணவர்களின் கவனத்தை தக்கவைத்துக் கொள்ள நீங்கள் பயன்படுத்தும் ஐந்து (05) உத்திகளை எழுதுக.
4. முழுவிருத்தியின் எண்ணக்கருவினை வரையறுக்குக.
5. மாணவர் கற்றலின் நேரடி அவதானிப்பின் அனுகூலங்கள் இரண்டினையும் (02) மறைமுக அவதானிப்பின் அனுகூலங்கள் இரண்டினையும் (02) குறிப்பிடுக.
6. "விளைதிறனான கற்றலில் ஊக்கல் மிக முக்கியமானது" மாஸ்லோவின் தேவைப்பாட்டுக் கொள்கையின் அடிப்படையில் முதல் ஐந்து (05) படிநிலைகளை பட்டியற்படுத்துக.
7. அறிவாற்றல் விருத்தியுடன் தொடர்புடைய மாறாத்தன்மையினை (Conservation ability) உதாரணங்கள் மூலம் விளக்குக.
8. முழுமையற்ற சில மனவெழுச்சிகளை வெளிப்படுத்தும் ஆரம்பப்பாடசாலை பிள்ளை தொடர்பாக ஆசிரியர் நடைமுறைப்படுத்த வேண்டிய ஐந்து (05) செயற்பாடுகளை பரிந்துரை செய்க.

(05 x 08 = 40 புள்ளிகள்)

## பகுதி II

9\.

i. கல்வி உளவியலுடன் தொடர்புடைய ஐந்து (05) துறைகளை எழுதுக.

(05 புள்ளிகள்)

ii. கல்வி உளவியலால் விருத்தி செய்யப்பட்ட ஆசிரியரின் வகிபங்கினை பின்வரும் தலைப்புக்களின் அடிப்படையில் பகுப்பாய்வு செய்க.

- கற்றல் நோக்கங்களின் வரையறை
- கற்றல் அனுபவத்தினை ஒழுங்கமைத்தல்
- கற்றலின் மதிப்பீடு

(15 புள்ளிகள்)

10\.

i. பிள்ளையின் நடத்தை பற்றி கற்கும் பரிசோதனைசார், பரிசோதனைசாரா முறைகளை ஒப்பீட்டளவில் ஆராய்க.

(10 புள்ளிகள்)

ii. விடய ஆய்வு முறை (Case Study) என்பதால் கருதுவது யாது? விடய ஆய்வினை நீர் நடாத்தும் போது பிள்ளை பற்றிய தகவல்களை சேகரிப்பதற்கு பொருத்தமான திட்டத்தினை தயாரிக்குக.

(10 புள்ளிகள்)

11\.

i. பியாஜே, விகொட்ஸ்கியினால் முன்வைக்கப்பட்ட இரண்டு (02) கோட்பாடுகளின் கொள்கைகளினை உதாரணங்கள் மூலம் கலந்துரையாடுக.

(10 புள்ளிகள்)

ii. விகொட்ஸ்கியின் கோட்பாடுகளின் அடிப்படையில் ஆரம்ப பிரிவு ஆசிரியரது வகிபங்கினை விளக்குக.

(10 புள்ளிகள்)

12\.

i. கெஸ்ரால்ட் கோட்பாட்டடிப்படையில் முதன்மை கொள்கையினை உதாரணங்கள் மூலம் விளக்குக.

(10 புள்ளிகள்)

ii. கெஸ்ரால்ட் கோட்பாட்டின் அடிப்படையில் ஆரம்ப பிரிவு ஆசிரியர்களது வகிபங்கினை விளக்குக.

(10 புள்ளிகள்)

13\.

i. ஞாபக சக்தியினை மேம்படுத்துவதற்கு ஆரம்ப பிரிவு ஆசிரியராக நீர் பிரயோகிக்கும் மூன்று (03) உத்திகளை பற்றி கலந்துரையாடுக.

(10 புள்ளிகள்)

ii. கற்றல் இடமாற்றத்தை விளக்குக மற்றும் கற்பித்தலினால் கற்றல் இடமாற்றம் அல்லது பயிற்சி இடமாற்றம் ஏற்படும். இதன் முக்கியத்துவத்தினை உதாரணங்கள் மூலம் விளக்குக.

(10 புள்ளிகள்)

பதிப்புரிமை பெற்றது